வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 161/2022

வழக்கு சாட்சி LW4/PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பார்த்திபன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | கோதண்டன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 57 |

தேதி 05.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் பெரிய மாத்தூரில் வசித்து வருகிறேன். தற்போது என்னிடம் பார்வை மகஜரில் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள். 26.11.2022 அன்று பெருமாள் கோவில் எதிரில் சம்பவ இடமான கோவிலில் காலை 9.00 மணியளவில் போலீசார் பார்வையிட்ட போது நானும் எனது தம்பி வீராவும் சாட்சிக் கையொப்பம் செய்தோம். வரைபடம் வரைந்தார்கள். போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கோவிலில் நிர்வாகிகள் யார் என்றால் பூசாரிகளே நிர்வாகம் செய்துக் கொள்வார்கள். திருடுப்போனது எப்போது தெரியும் என்றால் மறுநாள் 19.11.2022 அன்று தெரியும். நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. கோவிலில் சிசிடிவி பதிவு உள்ளதா என்றால் உள்ளது. சிசிடிவி பதிவில் நாங்கள் அன்றைய தினம் இருந்தோமா என்பது தெரியுமா என்றால் அன்றை தினம் சிசிடிவி ஆனது கோவிலில் புழக்கத்தில் இல்லை. போலீஸ் விசாரணையில் சிசிடிவி புழக்கத்தில் இல்லை என்பதை கூறினேனா என்றால் இல்லை. சிசிடிவி பதிவினை பார்த்தால் நான் அன்றைய தினம் சம்பவ இடத்தில் இல்லை

என்பது தெரிந்துவிடும் என்பதாலும், நான் கோவில் நிர்வாகி என்பதால் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தது தெரிந்துவிடும் என்பதாலும் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**